**செ.வெ.எண்-06** **நாள்-04.11.2019**

# பத்திரிக்கைச் செய்தி

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் 2021 செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேசத் திறன் போட்டியில் பங்கேற்க ஏதுவாக தொடக்க நிலையில் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான திறன் போட்டிகளில் பங்கேற்க https://worldskillsindia.co.in/worldskill/world/ என்ற இணையதளத்தில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

6 துறைகளில் உள்ள 47 தொழிற் பிரிவுகளில் தங்களது தனித்திறனை வெளிப்படுத்தும் விதமாக நடைபெற உள்ள மாவட்ட அளவிலான திறன் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க **கடைசி நாள் 25.11.2019**. **வயது வரம்பு :1.1.1999 அன்றும்**, அதற்குப் பிறகும் பிறந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட சில தொழிற் பிரிவுகளுக்கு **1.1.1996 அன்றும்,** அதற்குப்பிறகும் பிறந்தவர்கள் தகுதியுடையவர்களாவர்.

ஐந்தாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்புவரைக் கல்வித் தகுதிபெற்றவர்கள் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் மற்றும் படித்து கொண்டிருப்பவர்கள், தொழிற்பயிற்சி நிலையம், தொழிற்நுட்ப கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியில் படித்தவர்கள் மற்றும் படித்துக் கொண்டிருப்பவர்கள், தொழிற்சாலையில் பணியில் உள்ளவர்கள், குறுகிய கால தொழிற்பயிற்சி பெற்றவர்கள் (PMKVY) ஆகிய அனைவரும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

மேலும் விபரங்களை மேற்கண்ட இணையதளத்தின் மூலம் அறிந்துக் கொள்ளலாம். தொடர்புக்கு மாவட்டதிறன் பயிற்சி அலுவலர், மாவட்டதிறன் பயிற்சி அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்ப அலுவலக வளாகம், (முதல் தளம் பெரம்பலூர் (அரியலூர்) மாவட்டம், அலைபேசிஎண் : 9488451405 தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**